**09.08.2021**

**பொருள் எண்.1**

திருச்செங்கோடு நகராட்சியில் பொது பிரிவில் அலுவலக உதவியாளராக பணிபுரியும் திரு.M.விக்னேஷ்வரன், என்பவர் தன் குடும்ப சூழ்நிலைக் காரணமாக எடப்பாடி நகராட்சிக்கு பணிமாறுதல் செய்ய கோரியதன்படி, பணி மாறுதல் செய்யக்கோரி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களுக்கு பரிந்துரைச் செய்ய மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.4210/2021/சி1)**

**பொருள் எண்.2**

திருச்செங்கோடு நகராட்சி பொது சுகாதார பிரிவு பயன்பாட்டில் உள்ள வாகன எண்.TN34AA–9084 வாகனத்திற்கு காப்பீட்டுத் தொகை செலுத்துமாறு யுனைடெட் இந்தியா இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி லிட் திருச்செங்கோடு நிறுவனம் மூலம் பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேலும் பொது சுகாதாரப் பணிகளுக்கு தினந்தோறும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே மேற்கண்ட காப்பீட்டுத் தொகை அவசியம் யுனைடெட் இந்தியா இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி திருச்செங்கோடு நிறுவனத்திற்கு பட்டியல் தொகையான ரூ.42,845/–ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி பொது சுகாதார பிரிவு தூய்மை பணி பயன்பாட்டினை கருத்தில் கொண்டு தனி அலுவலர் (ம) ஆணையர், அவர்களின் முன் அனுமதி பெற்று காப்பீட்டுத் தொகையினை யுனைடெட் இந்தியா இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி திருச்செங்கோடு நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(கோப்பு எண்.2274/2020/எச்2)**

**பொருள் எண்.3**

திருச்செங்கோடு நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு குப்பை அகற்றும் காம்பேட்டர் லாரி வண்டி எண்.TN34AA9084 பின் டயர் 4–க்கு திருச்செங்கோடு வேளாண்மை கூட்டுறவு பொறியியல் பணி கூட்டுறவு மையம் லிமிடெட் SL(SPL)170, திருச்செங்கோடு என்ற நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி ரூ.66400/–க்கு பெறப்பட்டு உத்தேச செலவினமாக ரூ.67000/–க்கு மன்றபொருள் வைக்காமல் தவறுதலாக ரூ.47000/–க்கு குறைவான தொகைக்கு மன்ற பொருள் வைக்கப்பட்டு நகர்மன்ற தீர்மான எண்.199, நாள்:30.09.2019–ல் மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. குறைவான தொகைக்கு அனுமதி பெறப்பட்டதால் பொருள் விநியோகம் செய்த மேற்கண்ட நிறுவனத்திற்கு இன்று வரை தொகை வழங்கப்படாமல் உள்ளது. எனவே தவறுதலாக விடுபட்டுபோன தொகை ரூ.20000/–க்கு மன்றத்தின் அனுமதி பெற்று பட்டியல் தொகை ரூ.66400/–ஐ வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தவறுதலாக விடுப்பட்ட தொகை ரூ.20000/–க்கு அனுமதி வழங்கிய மொத்த தொகை ரூ.66400/– கூட்டுறவு வேளாண்மை மையம், திருச்செங்கோடு என்ற நிறுவனத்திற்கு வழங்கலாம்.
3. செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

**(கோப்பு எண்.4068/2019/எச்2)**

**பொருள் எண்.4**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் தெளிவுரைக் கடிதம் ந.க.எண்.8338/2007/எப்3, நாள். 09.03.2007–இன்படி தமிழ்நாடு நகராட்சி பொறியியல் மற்றும் நீர் வழங்கும் பணி விதியில் பில்டர் பெட் ஆப்ரேட்டர் பணிக்கும் 2–ஆம் நிலை பைப்லைன் பிட்டர் பணியிடத்திற்கும் ஒன்றுக்கொன்றும் மாறுதல் செய்ய (Class III Category 6 and category 5) விதிகளில் இடமிருப்பதாலும் நகராட்சி ஆணையர் நியமன அதிகாரியென்தாலும் பணிமாறுதல் செய்ய வழங்கப்பட்ட தெளிவுரைக் கடிதத்தின்படியும், இந்நகராட்சியில் பில்டர்பெட் ஆப்ரேட்டராக பணிபுரியும் திரு.M.ஸ்ரீதர், என்பவர் குழாய் பொருத்துநர் நிலை – II (பைப்லைன் பிட்டர் நிலை– 2) பதவி மாற்றம் (Interchange) செய்யக் கோரியுள்ளதன்படி இந்நகராட்சியில் குழாய் பொருத்துநர் பணியிடம் காலி இல்லை என்பதால் அன்னார் விண்ணபத்தின் மீது உரிய நடவடிக்கை எடுக்க நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களுக்கு பரிந்துரை செய்து அனுப்ப மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.5276/2020/இ1)**

பொருள் எண்.5

திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான வரியில்லா இனங்களுக்கு 2007–2008 முதல் 2011–2012 முடியும் ஆண்டிற்கும் மற்றும் 2013 முதல் 2014 முடியும் ஆண்டிற்கு, கலால் துறையால் சேவை வரி செலுத்த கோரி வழங்கப்பட்ட கேட்பினை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரவுள்ளதால், அதற்கு 2021–2022–ம் ஆண்டில் வழக்கறிஞர் கட்டணம் வழங்கவும் மற்றும் வழக்கிற்கு ஆகும் இதர செலவினத்தையும் சேர்த்து உத்தேச செலவினமாக ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.

<u>(கோப்பு எண்.9411/2008/அ1)</u>

பொருள் எண்.6

திருச்செங்கோடு நகராட்சி அலுவலகத்தில் உள்ள கம்யூட்டர், பிரிண்டர், UPS, Battery, CCTV மற்றும் Net working ஆகியவற்றை ஒரு வருட காலத்திற்கு (Annual Maintances Charges- AMC) பராமரிக்கவும் மற்றும் அனைத்து கணினிகளுக்கும் K7 Antivirus Software Install செய்திடவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/–க்கு மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

<u>(கோப்பு எண்.4839/2021/இ1)</u>

பொருள் எண்.7

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7, தொண்டிக்கரடு வீடு இல்லாதோர் சங்க காலனி பகுதியில் நகராட்சி பொதுக்கழிப்பிடம் செல்லும் பாதையில் உள்ள பாறையினை உடைத்து சிமெண்ட் சாலை மற்றும் படிக்கட்டுகள் அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/–க்கு மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

<u>(கோப்பு எண்.4840/2021/இ1)</u>

பொருள் எண்.8

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.27, பொதுக் கழிப்பிடம் மிகவும் பழுதடைந்துள்ளதால் புதியதாக Septic tank செல்லும் Drainage Cover Slab, கதவு, மின்வசதி மற்றும் பைப்லைன் வசதிகள் செய்துத் தர ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,50,000/–க்கு மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

<u>(கோப்பு எண்.4677/2021/இ1)</u>

பொருள் எண்.9

திருச்செங்கோடு நகராட்சி அலுவலகத்தில் பொறியியல் பிரிவில் உள்ள கலர்பிரிண்டருக்கு புதியதாக கலர் டோனர் வாங்கி பொருத்த ஆகும் உத்தேச செலவினம் ரூ.30,000/–க்கு மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணியின் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் (ம) ஆணையர் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ளலாம்.

<u>(கோப்பு எண்.4623/2021/இ1)</u>

**பொருள் எண்.10**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15, சூரியம்பாளையம் விநாயகர் கோயில் அருகில், வார்டு எண்.3, கைலாசம்பாளையம் கருங்கல் கரடு, வார்டு எண்.2, செங்கோடம்பாளையம் வார்டு எண்.5, கோம்பை நகர் மற்றும் வார்டு எண்.17, மலர்அரசன் தியேட்டர் சாலை பகுதியில் பழுதடைந்த உப்புத் தண்ணீர் குழாய் மாற்றி புதியதாக GI மற்றும் HDPE Pipe Line அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.4,50,000/—க்கு மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.4521/2021/இ2)**

**பொருள் எண்.11**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2, சண்முகாபுரம் சம்மர் இந்தியா லைன் மேற்கு பகுதி மற்றும் முனியப்பன் கோயில் அருகில், வார்டு எண்.7, தொண்டிக்கரடு OHT tank அருகில், வார்டு எண்.12, கூட்டப்பள்ளி மற்றும் வார்டு எண்.15, சூரியம்பாளையம் பகுதியில் (Sintex Tank) சின்டெக்ஸ் டேங்க் மூலம் GI Pipe Line அமைத்து உப்புதண்ணீர் வசதி செய்துத்தர ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,00,000/—க்கு மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.4520/2021/இ2)**

**பொருள் எண்.12**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட சூரியம்பாளையம், செங்கோடம்பாளையம், தொண்டிகரடு, சங்ககிரி ரோடு Prd Complex அருகில், கைலாசம்பாளையம் பகுதியில் உள்ள குடிநீர் பகிர்மான குழாயில் உள்ள பழுதடைந்த CI மற்றும் DI Value – யினை புதியதாக மாற்றம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/—க்கு மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.4179/2021/இ2)**

**பொருள் எண்.13**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.30, கொல்லப்பட்டி EB Office முதல் H type வரை, சக்தி மாரியம்மன் கோவில் முதல் D type வரை, D type முதல் பார்க் தெரு வரை, ஜெயா கடை முதல் LIC அலுவலர் வீடுவரை ஆகிய பகுதிகளில் 50mm(1 ½" ) HDPE Pipe புதியதாக வாங்கி பொருத்தும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,40,000/—க்கு மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.5021/2021/இ2)**

**பொருள் எண்.14**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.32 & 33 அண்ணாபூங்கா முதல் நரிபள்ளம் கோவில் வரை, சமயபுரம் மாரியம்மன் கோவில் முதல் பச்சியம்மன் கோவில் வரை, மலைசுத்தி ரோடு முதல் நாடார் தெரு மாரியம்மன் கோவில் வரை ஆகிய பகுதிகளில் புதியதாக 50mm(1 ½" ) HDPE Pipe line புதியதாக வாங்கி பொருத்தும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,10,000/—க்கு மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.5022/2021/இ2)**

**பொருள் எண்.15**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.23 & 32 சாலப்பாளையம் தீயணைப்பு நிலையம் அருகில், MGR நகர், குருமுனியப்பன் கோவில், நரிக்குறவர் தெரு, பச்சியம்மன் கோவில் அருகில் மற்றும் ஜான்சன் கம்பெனி அருகில் புதியதாக Sluice Value வாங்கி பொருத்த பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,25,000/—க்கு மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.5020/2021/இ2)**

**பொருள் எண்.16**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.29, சாலப்பாளையம் ஈரோடு ரோடு குறிஞ்சி பேக்கரி முதல் அருந்ததியர் தெரு வரை, கொட்டக்காடு தெரு 1 முதல் 2 வரை Teachers Colony Main road முதல் பிள்ளையார் கோவில் வரையிலான பகுதிகளில் புதியதாக 50mm (1 ½" ) HDPE Pipe line வாங்கி பொருத்த பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,40,000/—க்கு மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.5023/2021/இ2)**

**பொருள் எண்.17**

திருச்செங்கோடு நகராட்சி அலுவலகத்தில் பொறியியல் பிரிவில் உள்ள கலர்பிரிண்டருக்கு புதியதாக டோனர் வாங்கும் பணிக்கு அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் 02.08.2021—இல் முன் அனுமதி பெற்று 05.08.2021—இல் விலைப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | SPYDER TECHNOLOGY, SALEM | VENUS TECH | RAJ COMPUTERS |
|---|---|---|---|---|
| 1 | திருச்செங்கோடு நகராட்சி அலுவலகத்தில் பொறியியல் பிரிவில் உள்ள கலர்பிரிண்டருக்கு புதியதாக டோனர் வாங்கும் பணி | Rs. 29400/- | Rs. 29700/- | Rs. 29850/- |

**அலுவலக குறிப்பு:**

1. மேற்கண்ட 3 விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள **SPYDER TECHNOLOGY, SALEM** என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கலாம்

**(கோப்பு எண்.4623/2021/இ1)**

**பொருள் எண்.18**

திருச்செங்கோடு நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் 30.07.2021—ந் தேதி அன்று புறஆதார முறையில் 164 தூய்மைப்பணியாளர்கள்,140 டெங்கு ஒழிப்பு பணியாளர்கள் மற்றும் நகராட்சி மற்றும் அரசு பள்ளிகளில் 30 பணியாளர்களை கொண்டு தூய்மை செய்யும் பணி ஆகிய மூன்று பணிகளுக்கும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியின் விளம்பரத்தை தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்கள், மாநில ஒப்பந்த மலரில் விளம்பரம் செய்தமைக்கு Madhu ads–Chennai நிறுவனத்தால் பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பட்டியல் தொகையான ரூ.79,905/— வழங்க மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினத்தை பொது நிதி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.2576/2019/எச்1)**

பொருள் எண்.19

திருச்செங்கோடு நகராட்சி பொதுசுகாதார பிரிவில் பொது சுகாதார பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வரும் வாகனம் எண். TN 34 A 1183 வாகனத்தை திருச்செங்கோடு வட்டார போக்குவரத்தில் தகுதி சான்று பெறவும் மேற்படி வாகனத்தில் ஏற்பட்டுள்ள அனைத்து பழுது பணிகள் மேற்கொண்டு வழங்க தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று 01.03.2021–ந்தேதி விலைப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டது. அவ்வாறு விலைப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டதில் 09.03.2021–ந் தேதி கீழ்காணும் மூன்று நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பட்டள்ளன.

| வ.எண் | விலைப்புள்ளிகள் வரப்பெற்ற நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | M/s.J.V.K. ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், 279/28J J.V.K காம்ப்ளக்ஸ் சேலம். | ரூ.81,833/– |
| 2 | M/s. ஸ்ரீ வெள்ளியங்கிரி ஆட்டோ ஒர்க்ஸ், 106/4 சங்ககிரி மெயின் ரோடு, சீத்தாராம்பாளையம், திருச்செங்கோடு. | ரூ.80,476/– |
| 3 | M/s. சுப்ரீம் கார்ஸ், Dr.M/s,உதயமூர்த்தி ஸ்கூல் எதிரில், பரமத்தி ரோடு, நாமக்கல். | ரூ.83,190/– |

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை 2–ல் காணும் M/s. ஸ்ரீ வெள்ளியங்கிரி ஆட்டோ ஒர்க்ஸ், திருச்செங்கோடு என்ற நிறுவனம் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கியுள்ளது. எனவே குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய நிறுவனத்திற்கு பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று சேவை உத்தரவு வழங்கப்பட்டமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண்.2273/2020/எச்2)